**S.C. No.335/2005**
**P.W.2 திரு. வானமாமலை**
**நாள் – 23.06.2025**

( 6 மற்றும் 7 எதிரிகள் ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை. 1வது எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 2 மற்றும் 4 எதிரிகள் இறந்துவிட்டார்கள் )

**1, 6 மற்றும் 7 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

அன்றைய தினம் சுமார் 500 நபர்கள் தடுப்பு காவலில் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்துவதற்காக நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தார்கள் என்றால் சரிதான். காவல்துறை துணை ஆணையாளர் திரு.அமல்ராஜ் அவர்கள் தலைமையில் சுமார் 500 போலிசார் நீதிமன்ற வளாகத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தார்கள் என்றால் சரியல்ல, சுமார் 100 நபர்கள் இருந்தார்கள். நான் சம்பவ தினத்தன்று பணியில் இருந்தது சம்பந்தமாக அண்ணா நகர் காவல் நிலைய பொதுநாட்குறிப்பில் எனது பணி விவரம் குறிக்கப்பட்டிருந்ததா என்றால் குறிக்கப்பட்டிருந்தது. மேற்படி பொதுநாட்குறிப்பினை புலன் விசாரணை அதிகாரி கைப்பற்றவில்லை. 4வது எதிரி பர்மா கண்ணன் கல்லால் என்னை அடித்ததாக நான் புகாரிலோ போலிஸ் விசாரணையிலோ சொல்லியுள்ளேனா என்றால் கல்லால் எறிந்ததாக மட்டும் குறிப்பிட்டுள்ளேன். மருத்துவமனை மருத்துவரிடம் எனக்கு ஏற்பட்ட காயங்கள் ஒரு கும்பலால் எறியப்பட்ட கற்களால் ஏற்பட்டது என்று மருத்துவரிடம் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் அண்ணா நகர் காவல் நிலைய ஆய்வாளர் பொறுப்பில் இருந்த போது சம்பவம் நடந்ததால் இந்த புகாரை கொடுத்துள்ளேன். ஒரு காவலர் பணியில் இருக்கும் போது சம்பவம் நடந்தால் அது குறித்து அந்த காவலர் தனி புகார் அளிக்க வேண்டும் என்றால் சரியல்ல. அவ்வாறு ஒரு தனிப்புகார் அளிக்கும்பட்சத்தில் தனிப்புகார் அளிக்கும் அதிகாரிக்கு மேல் நிலையில் உள்ள அதிகாரி தான் வழக்கு பதிவு செய்து புலன் விசாரணை செய்ய வேண்டும் என்றால் சரிதான். எதிரிகள் காவலில் இருந்திருந்தால் இந்த வழக்கு சம்பவத்தில் ஈடுபட

வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கு சம்பவம் நடந்த பிறகு வேடிக்கை பார்த்த எதிரிகளை பிடித்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன தேதியில், நேரத்தில், விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், நானும் தாக்கப்படவில்லை என்றும், வழக்கிற்காக எனது மேல் அதிகாரியின் உத்தரவின் பேரில் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை.